முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2023

A

பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

பொருளியல்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை
   அ) சொத்து மற்றும் நலமும் ஆ) உற்பத்தி மற்றும் நுகர்வு
   இ) தேவையும் மற்றும் அளிப்பும் ஈ) நுண்ணியல் மற்றும் பேரியல்
2. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி
   அ) ஜே.எம்.கீன்ஸ் ஆ) காரல் மார்க்ஸ்
   இ) ஆடம் ஸ்மித் ஈ) சாமுவேல்சன்
3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
   அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு
4. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது _____.
   அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
   இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31
5. மொத்த அளிப்பு சமம்
   அ) C + I + G ஆ) C + S + G + (X – M)
   இ) C + S + T + (X – M) ஈ) C + S + T + Rf
6. தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டிவீதம் _____க்கான வெகுமதி.
   அ) முதலீடு ஆ) தேவை இ) மூலதனம் ஈ) சேமிப்பு
7. பெருக்கியின் மதிப்பு =
   அ) 1/(1 – MPC) ஆ) 1/MPS இ) 1/MPC ஈ) (அ) மற்றும் (ஆ)
8. MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்?
   அ) ஆடம்ஸ்மித் ஆ) J.M.கீன்ஸ் இ) ரிக்கார்டோ ஈ) மால்தஸ்
9. "பணம் எதைச் செய்கிறதோ, அதுவே பணம்" என்ற கூற்றை கூறியவர் யார்?
   அ) மார்ஷல் ஆ) வாக்கர் இ) கிரெளதர் ஈ) இர்விங் பிஷர்
10. _____ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது.
    அ) நடக்கும் ஆ) ஒடும் இ) தவழும் இ) தாவும்

பகுதி - ஆ

II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா) 5 x 2 = 10

11. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
12. பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.
13. தேசிய வருவாய் - இலக்கணம் தருக.
14. முழு வேலைவாய்ப்பு - வரையறு.
15. சராசரி சேமிப்பு நாட்டம் (APS) - வரையறு.
16. பெருக்கி - வரையறு.
17. நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.

பகுதி - இ

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா) 5 x 3 = 15

18. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.

19. செலவு முறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.

20. கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியினை கூறுக.

21. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.

22. பணவீக்கத்தின் வகைகளைப் பற்றி எழுதுக.

23. தொன்மையியத்தையும், கீன்ஸியத்தையும் ஒப்பிடுக. (ஏதேனும் மூன்று)

24. கீழ்க்காண்பவற்றை சுருக்கமாக எழுதுக.

அ) பருவகால வேலையின்மை

ஆ) உடன்பாடில்லா வேலையின்மை

இ) படித்தவர் வேலையின்மை

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 x 5 = 15

25. அ) முதலாளித்துவ, சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

(அல்லது)

ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விவரி.

26. அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

(அல்லது)

ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் MEC), முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

27. அ) பணத்தின் பணிகளை விளக்குக.

(அல்லது)

அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரி.

******